திரு. ஏ. சி நரசிம்மன்: தலைவரவர்களே, வேலூரில் ஒரே ஒரு கோவாபரேடிவ் பிரிண்டிங் பிரஸ் தான் இருக்கிறது. அதனிடம் வேலை கொடுத்தால் சீக்கிரமாக செய்து கொடுப்பதில்லை. எனவே அரசுத் துறையில் ஒரு அச்சகத்தை நிறுவினால், அங்கே பல வேலைகள் அதிகமாக நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அரசாங்கம் விரைவிலே அங்கே ஒரு அரசு அச்சகத்தை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு அச்சகம் ஒன்று நிறுவுவது என்பதை கொள்கையளவில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து அது நடைமுறைப்படுத்தப்படும்.

முத்துக்குளிப்பு

* 267 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் முத்துக்கள் கிடைக்கின்றன ?

(இ) முத்துக்குளிப்பவர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் கொடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(அ) (1) திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் வடக்கில் உள்ள வைப்பார் பெரியபாரிலிருந்து தெற்கேயுள்ள பள்ளிக்கல்லுப்பார் வரையில் 30 அடி முதல் 72 அடி ஆழம் வரையிலும்.

(2) இராமநாதபுரம் வருவாய் மாவட்டம் கடற்கரை ஓரங்களில் வடக்கேயுள்ள பாம்பன்கரைபார் தொடங்கி தெற்கேயுள்ள வெம்பார்கரைபார் வரையில் 27 அடி முதல் 42 அடி ஆழம் வரையிலும் ;

(3) இராமேஸ்வரம் தீவின் ஓரங்களில் வடக்கே 30 அடி முதல் 42 அடி ஆழம் வரையிலும் ;

(4) பாக் வளைகுடாவின் மேற்குக் கடற்கரையில் 79.8' 79.12', கிழக்கு நேர் கோடுகளுக்கு இடையிலும் முத்துச்சிப்பிப் பார்கள் காணப்படுகின்றன.

1972 மார்ச் 1]

(இ) முத்துக் குளிப்பவர்கள், அவர்கள் எடுத்த முத்துச் சிப்பிகள் மூன்றில் ஒரு பங்கினை தங்களது பங்காக எடுத்துக் கொள்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் முத்து கிடைக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்பதைப்பற்றி அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, 1955-லிருந்து 1961-ம் ஆண்டு வரையிலும்தான் முத்து எடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே 21 ஆண்டுகளுக்கு முன்பு முத்து எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பு இருக்கிறது. 1955-ம் ஆண்டிலிருந்து 1961-ம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட ரூ. 17,64,013 பெருமான முத்துக்கள் அரசாங்கத்தின் வருவாய்க்கு வந்திருக்கின்றன.

* 268 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி கடலில் முத்து எடுப்பது எத்தனை ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறுகிறது ?

(இ) அடுத்தப்படியாக முத்து எப்போது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) முத்துக் குளிப்பதற்கென்று குறிப்பிட்ட கால இடைவெளி எதுவும் கிடையாது. முத்துச் சிப்பிகள் முதிர்ச்சி அடைவதைக் கொண்டே முத்துக்குளிக்கப்படுகிறது. முத்துக்குளிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்காக ஒவ்வோர் ஆண்டும் முத்துச்சிப்பிபார் ஆய்வு செய்யப்படுகிறது. 26 ஆண்டுகளுக்குப் பின்னர் 1955 முதல் 1961 வரையில் கடைசியாக முத்துக் குளிக்கப் பட்டது.

(இ) 1970-ல் நடத்திய முத்துச்சிப்பிப்பார் ஆய்விலிருந்து, முத்துக்குளிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்துள்ளது.